# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Calender | : | } | Miscellaneous | : | |
| Preliminary Register | : | } | Case No. | : | **SPL.CC.2/2025** |
| Sessions | : | } | | | |
| | | { | Prosecution | : | **P.W.12** |
| Deposition of witness for : | | { | Defence | : | **D.W.** |
| | | { | Court | : | **C.W.** |

| **Name :** | சுந்தரமூர்த்தி | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **06.03.2026**

**எதிரி ஆஜர்.**

**சாட்சி காணொளி மூலம் ஆஜர்**

**முதல் விசாரணை:**

நான் தற்போது காவல்ஆய்வளராக மெட்ரோ பிரிவு CBCID சென்னையில் பணிபுரிகிறேன். கடந்த 09.12.2022ம் தேதி பெரம்பலூர் மாவட்ட ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவில் உதவி ஆய்வளராக பணிபுரிந்தபோது குற்ற எண்.2/2022 வழக்கில் பதிவுசெய்யப்பட்ட முதல்தகவல்அறிக்கை மற்றும் ஒப்படைப்பு மகசரை கனம் தலைமை நீதித்துறை நடுவர் பெரம்பலூர் நீதிமன்றத்தில் 11.00 மணிக்கு ஒப்படைத்து நிலையம் திரும்பினேன். பிறகு இவ்வழக்கின் எதிரியான திருமதி.இந்திராணி என்பவரை காவல்அடைப்பு அறிக்கையுடன் மு.நீ.க.1761 திலகம் மற்றும் இரண்டாம் நிலை காவலர் 2049 அருண்குமார் ஆகியோருடன் 10.12.2022ம் தேதி அதிகாலை 01.00 மணியளவில் கனம் தலைமை நீதித்துறை நடுவர் அவர்களிடம் ஆஜர் செய்து பின்னர் எதிரியை திருச்சி பெண்கள் மத்தியசிறையில் ஒப்படைத்து விட்டு நிலையம் திரும்பினேன். இதுசம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் 11.00 மணியளவில் நான் தபாலை ஒப்படைத்தேன். எதிரியின் அலுவலகத்திற்கு அன்று காலையில் நான் செல்லவில்லை. அன்று நான் கொளாக்காநத்தம் கிராமத்திற்கு சென்றேன். அப்போது என்னுடன் எங்கள் அலுவலகத்தில் பணிபுரிந்த மனோகர் என்ற காவல்அதிகாரி உடன் வந்தாரா என்றால் என்னுடன் வரவில்லை. தபால் கொடுத்து விட்டு கொளாக்காநத்தம் கிராமத்திற்கு சென்றேன். இந்தவழக்கில் தலைமை நீதித்துறை நடுவர் அவர்களிடம் தபால் கொடுத்தது மற்றும் காவல்அடைப்புக்கு எதிரியுடன் சென்றது தவிர வேறு விவரங்கள் எனக்கு தெரியாது.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.